# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப் பரீட்சை - 2023

| தரம் - 8 | கர்நாடக சங்கீதம் | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி – I

(01) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. ஜண்டை வரிசைகளை இயற்றியவர்.
   1) புரந்தரதாசர் 2) தியாகராஜர்
   3) முத்துத்தாண்டவர் 4) கோபாலகிருஸ்ணபாரியார்

02. ஒரு அலங்காரத்தின் மொத்த ஆவர்த்தனங்கள்
   1) 07 2) 05 3) 2 ½ 4) 10

03. ஸ ப ஸ்வரங்கள் என்பது.
   1) பேதமடையும் ஸ்வரம் 2) தீர்க்க ஸ்வரம்
   3) அசல ஸ்வரம் 4) செயற்கை ஸ்வரம்

04. கணநாதா என்னும் கீதத்தை இயற்றியவர்
   1) பொன்னையாபிள்ளை 2) ஸ்ரீ புரந்தரதாஸர்
   3) TV பிச்சையப்பா 4) பொன் ஸ்ரீ வாமதேவன்

05. ஸ்வரஸ்தானங்கள்.
   1) 07 2) 10 3) 12 4) 02

06. விக்ருதி ஸ்வரம் என்பது.
   1) சுத்த ஸ்வரம் 2) கம்பித ஸ்வரம்
   3) அவிக்ருதி ஸ்வரம் 4) இயற்கை ஸ்வரம்

07. சங்கராபரண இராகத்தின் மேள எண்ணிக்கை.
   1) 15 2) 28 3) 05 4) 29

08. பேதமடையும் ஸ்வரங்களாவன.
   1) ரி, க. த 2) ஸ, த, ப 3) ப, ம, க 4) ஸ, ப, ரி

09. எளிமையான இசையமைப்பும் தாள அமைப்பையும் கொண்ட இசை உருப்படி.
   1) கீதம் 2) வர்ணம் 3) தில்லானா 4) மெல்லிசைப் பாடல்கள்

10. ஸ்வரதானங்களை தமிழிசையில் எவ்வாறு அழைப்பர்.
   1) கோவை 2) ஸ்வரநிலைகள் 3) தாது 4) ஸ்வரஸ்தானம்

11. அங்க முடிவைக் காட்டும் குறியீடு.
   1) // 2) ~~~~~~ 3) ★ 4) |

12. ஜண்டைவரிசைக்கு வழங்கப்படும் மறுபெயர்.
   1) தாட்டுவரிசை 2) அப்பியாச வரிசை
   3) இரட்டை வரிசை 4) மேல்ஸ்தாயி வரிசை

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

13. மலஹரி இராகத்தின் ஆரோகணம் அவரோகணம்.

1) ஸரிமபதஸ் - ஸ்தபமகரிஸ　　2) ஸரிகபதஸ் - ஸ்தபகரிஸ

3) ஸரிகபநிஸ் - ஸ்நிபகரிஸ　　4) ஸரிமபநிஸ் - ஸ்நிபமரிஸ

14. ஒப்பாரிப்பாடல்கள் பாடப்படும் ராகங்கள்.

1) கல்யாணி, முகாரி　　2) முகாரி, ஆஹிரி

3) ஆஹிரி, தோடி　　4) மத்தியமாவதி, ஆரபி

15. 4வது ஸ்வரஸ்தானம்.

1) சாதாரண காந்தாரம்　　2) அந்தரகாந்தாரம்

3) சுத்தமத்திமம்　　4) பஞ்சமம்

16. கிராமத்து மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் பாடல்.

1) சினிமாப்பாடல்　　2) நாட்டார்பாடல்

3) கதைப்பாடல்　　4) இலக்கியப்பாடல்

17. அப்பியாசாகான உருப்படிகளில் முதன் முதலில் சாகித்திய ரூபமாக கற்கும் உருப்படி.

1) கீதம்　　2) கீர்த்தனை　　3) அலங்காரம்　　4) பதம்

18. மேல்ஸ்தாயி வரிசைப் பாடல் பாடப்படும் இராகம்

1) மோகனம்　　2) கல்யாணி

3) கமாஸ்　　4) மாயாமாளவகௌளை

19. தஸ் / தபமப // எனும் ஸ்வரத்திற்குரிய சாகித்திய பகுதி.

1) குகநேசா　　2) சிவகுமரா　　3) கணநாதா　　4) குருமணியே

20. ஆரம்ப இசைப் பயிற்சிக்குரிய இராகம்.

1) மாயாமாளவகௌளை　　2) சங்கராபரணம்

3) ஹரிகாம்போதி　　4) ஹரஹரப்பிரியா

(20 x 1 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

முதலாம் வினாவிற்கும் விரும்பிய இரண்டு வினாவிற்கும் மொத்தமாக மூன்று வினாக்களிற்கு விடையளிக்க.

(01)　1) தமிழிசையில் கோவை எனப்படுவது எது?

2) பேதமற்ற ஸ்வரங்கள் என்றால் என்ன? விளக்குக.

3) விக்ருதி ஸ்வரங்கள் என்றால் என்ன? விளக்குக. அவற்றை விளக்குக.

4) சப்த ஸ்வரங்களையும் அவற்றின் தமிழிசைப் பெயர்களையும் தருக?

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)



kalvi.lk

(02) 1) சப்தஸ்வரங்கள் 12 ஸ்வரஸ்தானங்கள் உருவான முறையை விளக்குக.

2) கோமள தீவிரஸ்வரங்களை வகைப்படுத்துக.

3) 12 ஸ்வரஸ்தானங்களையும் வரிக்கிரமமாகத் தருக.

(4+ 3 + 3 = 10 புள்ளிகள்)

(03) 1) நாட்டார் பாடல் என்றால் என்ன? இரண்டு மறு பெயர்களைத் தருக.

2) நாட்டார் பாடல்களை வகைப்படுத்தி அதற்கான உதாரணங்களை தருக?

3) நாட்டார் பாடல்கள் பாடப்டும் இராகங்கள் நான்கு தருக?

4) மட்டக்களப்பு. யாழ்ப்பாணம், மன்னார், மலையகம் ஆகிய பிரதேசங்களில் பாடப்படும் பாடல்களைத் தருக.

(4 + 2 + 2 + 2= 10 புள்ளிகள்)

(04) 1) நீர் கற்ற சஞ்சாரி கீதத்தின் இராகம், தாளம், இயற்றியவர் என்பவற்றை குறிப்பிடவும்.

2) சஞ்சாரி கீதத்தினை ஸ்வரசாகித்தியத்துடன் உரிய அங்க அடையாளக் குறியீடுகளுடன் எழுதவும்

(3 + 7 = 10 புள்ளிகள்)

(05) 1) மேல்ஸ்தாயி வரிசைப் பாடப்படும் இராகத்தைக் குறிப்பிடுக.

2) ஆதி தாளத்தின் அங்கங்களை தருக. அதன் அட்சரங்களையும் குறிப்பிடுக.

3) ஜண்டை வரிசையை இயற்றியவர் யார்?

4) ஜண்டை வரிசை அமைந்த இராகத்தின் மேள எண், ஸ்வரதானங்கள் என்பவற்றைத் தருக.

(1 + 2 + 1 + 6 = 10 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**